**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திருமதி. R. கீதா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை.**
**2023 ம் வருடம் அக்டோபர் மாதம் 30 ம் நாள் திங்கள்கிழமை**
**I.A.No.4/2023**
**In**
**O.S.No. 8/2020**

குழந்தைராஜ் ....மனுதார்/வாதி

..எதிர்..

சேகர்

....எதிர்மனுதார்/பிரதிவாதி

இம்மனுவானது, இறுதி விசாரணைக்காக 27.09.2023 ம் தேதி என் முன்னர் வந்த போது மனுதார்/ வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. S. இராஜசேகரன், பி.எஸ்.ஸி,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. I. சரவணன், பி.ஏ., பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று 30.10.2023 இந்நீதிமன்றம் வழங்கலான

**உத்திரவு**

இம்மனுவானது, மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் சட்டப்பிரிவு 151 சிபிசி–யின் படி, தாவா சொத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாக ஆணையாளர் நியமனம் செய்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதார்/வாதி தரப்பிலான மனு அபிடவிட்டின் சுருக்கம்:**

தாவா சொத்தும் அதன் கிழக்கே உள்ள பகுதிகளும் சேர்ந்து புலஎண் 387/12 ல் மனுதார்க்கு பூர்விக பாத்தியமான சொத்தாக இருப்பதில் தாவா சொத்துக்கு கிழக்கே உள்ள பகுதியில் மனுதார் ஓட்டுவீடு கட்டி அனுபவம் செய்து வருகின்றேன் என்றும் தாவா சொத்தை(பிராதில் 1 வது இலக்க சொத்து) மனுதாரர் காலியிடமாக வைத்து அனுபவம் செய்து வருகின்றேன் என்றும் மனுதாரர் வெளியூர் சென்றிருந்த சமயத்தில் பிராதில் கண்ட 2 வது இலக்க சொத்திற்கும் மேற்கே உள்ள புலஎண் 389 ல் எதிர்மனுதார் கடந்த ஜூலை 2017 ல் வீடு கட்டிய போது பிராதில் கண்ட 2 வது இலக்க சொத்தையும் சேர்த்து கட்டுமானம் எழுப்பி விட்டார் என்றும் தாவா பிராதில் கண்ட 2 வது இலக்க சொத்து தாவா சொத்து(பிராதில் 1 வது இலக்க சொத்து) மற்றும் அதன் கிழக்கே உள்ள மனுதாரர் குடியிருக்கும் வீட்டிற்கும் சேர்த்து புலஎண் 387/12 மனுதாரர் தந்தையான இஸ்ரா பெயரில் பட்டா எண் 1131 ல் மனைவரி தோராய பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது என்றும் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்து புல எண் 387/12 ல் இல்லை என்றும் தாவா சொத்து புலஎண்387/4 ல் உள்ளதாக பிரதிவாதி கூறியுள்ளார் என்றும் தாவா சொத்து எந்த புல எண்ணில் உள்ளது என்பது பற்றியும் தாவா சொத்தில் அளவுகள் மற்றும் நான்குமால் பற்றியும் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும் என்று பிரதிவாதி எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார் என்றும் எனவே தாவா சொத்து மனுதாரருக்கு பாத்தியமான புலஎண் 387/12 ல் உள்ளது என்பதை நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை வருவாய் துறை ஆவணங்கள் மூலம் அளந்து காண்பிப்பதன் மூலம் மனுதாரரால் நிரூபிக்க இயலும் என்றும்

தாவா சொத்து புல எண் 387/12 க்குள் உள்ளதை பிரதிவாதி மறுப்பதால் தாவா சொத்தின் அமைப்பையும் பிரதிவாதி ஆக்கிரமித்துள்ள பகுதியின் அளவுகளையும் சமூகம் கோர்ட்டிற்கு தெரியபடுத்துவதாற்காக நீதிமன்ற ஆணையர் நியமணம் செய்ய வேண்டியது அவசியமாயும் நியாயமாயும் உள்ளது என்றும் ஆகையால், தாவா சொத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாக ஆணையாளர் நியமனம் செய்து உத்தரவிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பிலான எதிருரை சுருக்கம்:**

சர்வே எண். 387/4 தமிழக அரசும் 1967 ஆம் ஆண்டு இராமநாதபுரம் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் ஹரிஜன மக்களின் நன்மைக்காகவும் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, வீடுகள் கட்டுவதற்காக சமூக பயன்பாட்டிற்காக கையகப்படுத்தப்பட்ட சொத்தின் ஒரு பகுதியாகும் என்றும் மேற்படி நம்பர் வாதி வகையறா பிரஸ்தாபிக்கும் பட்டா எண். 1131 மூலம் சர்வே எண்.387/12-ஐ தவறான தகவல் கொடுத்து தனி வட்டாட்சியரிடம் செல்வாக்கை பயன்படுத்தி, பொதுபயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை பட்டா கொடுத்திருப்பதாக தெரிகிறது என்றும் பட்டா நிலையான சான்று ஆவணம் இல்லை என பல்வேறு உயர்நீதிமன்ற தீர்ப்புகன் உள்ளன என்றும் மேலும் மேற்படி அசல் வழக்கும் கடந்த 29.10.2021 அன்று Trail என வாய்தா போடப்பட்டு நாளது தேதிவரை வாதி தனது தரப்பு விசாரணையை தொடங்காமல் காலம் கடந்து ஷை மனுவை தாக்கல் செய்திருப்பதன் மூலம் வாதியும் தனது செல்வாக்கை பயன்படுத்தி புதிய சாட்சிகளையும், ஆவணங்களையும் ஏற்படுத்த முயல்வதாகவே தெரிகிறது என்றும் மேற்படி வாதி தாக்கல் செய்துள்ள தற்காலிக உறுத்துக்கட்டளை

மனுவும் சமூகம் கோர்ட்டார் அவர்களால் I.A.No.02/2021 ம் 23.08.2021 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி வழக்கின் பிரச்சனைக்குரிய தீர்வுகளை சாட்சியம், ஆவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்யாமல் தாவா வழக்கை வேண்டுமென்று வாதியும் இழுத்தடிப்பு செய்வதன் மூலம் அசல் வழக்கும் தள்ளுபடி செய்ய வேண்டியதாய் இருக்கிறது என்றும் மனுதாரரும் ஷை மனுவை Vexatious ஆக தாக்கல் செய்துள்ளார் என்றும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஷை மனுவை எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**4.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. இம்மனுவில் மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதார்/ பிரதிவாதி தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:**

**கேள்வி :**

1. மனுதாரர்/வாதி மனுவில் கோரியவாறு மனுச்சொத்தின் ஸ்தல ஆய்வு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து உத்திரவிடலாமா?
2. இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**6.** அசல் வழக்கானது மனுதாரர்/ வாதி தரப்பில் தாவா 1ம் லக்க சொத்து மனுதாரர் / வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை பரிகாரமும் அதனை தொடர்ந்து தாவா 1ம் லக்க சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்/ பிரதிவாதி எவ்வித தடையிடர் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் தாவா 2ம் லக்க சொத்து வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை பரிகாரம் அதனை தொடர்ந்து தாவா 2ம்

லக்க சொத்தில் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டுமானத்தை அப்புறப்படுத்தி மனுதாரர்/ வாதி வசம் ஒப்படைக்க வேண்டியும் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்எதிர் வழக்குரையில் சர்வே எண் 387/4 தமிழக அரசால் 1967ம் ஆண்டு இராமநாதபுரம் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் ஹரிசன மக்களின் நன்மைக்காகவும் ஆர்ஜீதம் செய்யப்பட்டு வீடுகள் கட்டுவதற்காக சமூக பயன்பாட்டிற்காக கையகப்படுத்தப்பட்ட சொத்தின் ஒரு பகுதி என்றும், மனுதாரர்/ வாதி தவறான தகவல் கொடுத்து தனி வட்டாட்சியரிடம் தன் செல்வாக்கை பயன்னடுத்தி பட்டா பெற்றுள்ளார் என்றும் எதிர்வழக்காடியுள்ளார்.

**7.** இருதரப்பு வாதுரைகள் காணும்பொழுது அசல் வழக்கில் தாவா 2ம் லக்க சொத்தினை பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீன மீட்டடைவு பரிகாரம் குறித்து தீர்மானிக்க எதிர்மனுதாரர்/ பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட கட்டுமானம் மனுதாரர்/வாதி தரப்பில் கூறுவது போல் தாவா 2ம் லக்க சொத்தில் ஒரு பகுதியா அல்லது எதிர்மனுதாரர்/ பிரதிவாதி எதிர்வழக்காடியுள்ளது போல எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தின் ஒரு பகுதியா என கண்டறிவது அவசியம் ஆகும். தாவா 2ம் லக்க சொத்தினை பொறுத்து பரிகாரம் குறித்து தீர்வு காண தாவா 2ம் லக்க சொத்தினை அடையாளம் காண வேண்டிய அவசியம், சூழல் எழுந்துள்ளது.

**8.** எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் வழக்கு எழுவினாக்கள் வனையப்பட்டு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் இம்மனு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்வாதிடப்பட்டது.

நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரும் மனு தாக்கல் செய்வதற்கு கால அளவு உரிமையியல் நடைமுறைச்சட்டத்தில் நிர்ணயிக்கப்படவில்லை. வழக்கில் எந்நிலையிலும் நீதிமன்ற ஆணையர் நியமனம் வேண்டி மனு செய்யலாம். எனவே எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பு மனு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்வாதம் நிராகரிக்கப்படுகிறது.

9. இறுதியாக மேற்கண்ட பரிசீலனை அடிப்படையில் அசல் வழக்கில் தாவா 2ம் லக்க சொத்தினை பொறுத்து இறுதியாக முழுமையான தீர்வு காண தாவா சொத்துக்களை ஸ்தல ஆய்வு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யவேண்டியது அவசியமானது என தீர்மானித்து இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகின்றது.

முடிவாக வழக்கறிஞர் A. சண்முகசுந்தரம் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உத்திரவிடப்படுகின்றது. நீதிமன்ற ஆணையர் கட்டணமாக ரூ.5,000/–என நிர்ணயம் செய்யப்படுகின்றது. மனுதாரர்/ வாதி மேற்படி நீதிமன்ற ஆணையர் கட்டணத்தை நீதிமன்ற ஆணையர் தாலுகா சர்வேயர், கிராம் நிர்வாக அலுவலர் உதவியுடனும் வருவாய் துறை ஆவணங்கள் மற்றும் தரப்பினர்கள் ஆவணங்கள் சமர்ப்பித்தால் அவற்றின் அடிப்படையிலும் மனுச்சொத்தினை அளவீடு செய்து இயற்கை தன்மை குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்திரவிடப்படுகின்றது.

நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய மனு அழைக்க வாய்தா 15.11.2023.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணிணியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழத்திருத்தம் செய்யப்பட்டு 2023 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை**

மனுதார்/வாதி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**